[1982 பிப்ரவரி 6

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, பாபநாசம் பகுதி என்பது பல சிறப்பு மிக்க ஆலயங்கள், அருவி மற்றும் பல குளங்கள் எல்லாம் கொண்டிருக்கின்ற பகுதியாக அமைந்திருக்கின்றது. பொதிகை மலையிலே அமைந்திருக்கின்ற காரணத்தினால் இது ஒரு மலைவாஸ்தலம் என்ற அந்தத் தகுதியையும் பெற்றிருக்கிறது. இப்போது மாவட்ட உலாத் தலமாக்கவும் அபிவிருத்தி செய்யவும் தேர்ந்து எடுக்கப்பட்டிருப்பது பழைய யானைப்பாடி என்ற இடமாகும். அங்கே அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற முறையில் திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதியைப் பற்றியும் பரிசீலிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுக்கொள்ளும்.

திருத்தணி, பூண்டி ஆகிய இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

*வினா எண் 67—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி, பூண்டி இரண்டையும் சுற்றுலா மையமாக ஆக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) பூண்டி நீர்த்தேக்கத்தை மாவட்ட உலாத்தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திருத்தணியில் சாலையோர தங்கும் விடுதி (Motel) ஒன்றை அமைக்கும் கருத்துரு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. சண்முகம் : பூண்டி நீர்த்தேக்கத்தை சுற்றுலா மையமாக்க ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருத்தணியில் கன்னிகோயில் என்று இருக்கிறது. அதில் ஆறு சுனைகள் இருக்கின்றன. அந்த ஆறு நீரூற்றுகளில் ஊறுகின்ற நீர் சுவையாக இருப்பதால் அதை சுற்றுலா மையமாக்குவதால் அந்தப் பகுதியிலே உள்ள மக்களும் செங்கை மாவட்டத்தின் வட பகுதியில் உள்ள அந்த இடம் ஆறுபடைவீடு என்ற முறையிலே திருமுருகன் வீற்றிருக்கின்ற இடமாகவும் இருக்கின்ற காரணத்தினால் அதையும் சுற்றுலா மையமாக்க அடுத்த ஆண்டாவது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மாவட்ட உலாத்தலமாக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே முதலிலே பூண்டி நீர்த் தேக்கத்தை எடுப்பதாக இருக்கின்றது. அதற்குப் பிறகு பழவேற்காடு என்ற ஒரு புகழ்பெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஊரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை இரண்டும் முடிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அந்த நீர்வீழ்ச்சி பகுதியைப்பற்றிப் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்-

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருத்தணியும், பூண்டியும் சுற்றுலா மையமாக அறிவிக்கப்படும் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே போன்று, என்னுடைய தொகுதியான பழனி ஒரு நல்ல தலம்; சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரக்கூடியதாக இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தக் கோயிலின் வருமானம் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாயாக வருகிறது. பக்கத்தில் இரண்டு அணைக்கட்டுகளும் இருக்கின்றன. கொடைக்கானல் என்ற மலைவாசஸ்தலம் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பழனியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முயற்சியெடுக்குமா என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்புகின்ற கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், பழனி என்கிற அந்தப் பகுதி இப்பொழுது இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற நகரமாக விளங்கி வருகிறது. எந்த நகரத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்கின்ற திட்டம் எதுவுமில்லை. அப்படி அறிவித்து சுற்றுலாத் தலமாக மாற்ற முடியாது. பயணிகள் சென்று பயனடையும் வகையில் சில வசதிகளைச் செய்து தருவதற்காகத்தான் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகிறது. ஆகவே, இப்பொழுதே இலட்சக்கணக்கான மக்கள் பக்தர்களாகப் பழனியிலே வந்து கூடுவதால் அதைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று அவசியமில்லை.

அமரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் சிலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 68—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அமரர் ஜீவாவுக்குச் சிலை வைக்கும் செய்திக்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம்.